**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 46** **நாள் : 22.01.2026**

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், சந்திரயோகி சமாதி சாலையில் கட்டப்பட்டு வரும் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் திருமண மாளிகை இறுதிக்கட்டப் பணிகளை இன்று (22.01.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், இன்று (22.01.2026) திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர் சந்திரயோகி சமாதி சாலையில் சிஎம்டிஏ சார்பில் ரூ.21.50 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் திருமண மாளிகை இறுதிக்கட்டப் பணிகளை துரிதப்படுத்தும் வகையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தி, அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

இந்த மண்டபம் 2,767 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டு வருகிறது.

**பின்னர் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:**

தனியார் திருமண மண்டபங்களில் அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலை காரணமாக, பொதுமக்கள் தங்களுடைய திருமணங்கள் மற்றும் சுபநிகழ்ச்சிகளை நடத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறார்கள் என்பதை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சில இடங்களிலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 10 இடங்களிலும் இதுபோன்ற திருமண மண்டபங்களை கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில், கடந்த மாதம் 18ஆம் தேதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஜி.கே.எம். காலனியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருப்பெயரில் அமைக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான திருமண மண்டபத்தை தனது பொற்கரங்களால் திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கட்டப்பட்ட இந்த கட்டடம், தற்போது நாம் நிற்கும் சந்திரயோகி சமாதி பகுதி போன்ற பகுதிகளில் வசிக்கும் தினக்கூலி தொழிலாளர்கள், அரசுப் பணியாளர்கள் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்கள், தங்களது திருமணங்கள் மற்றும் சுபநிகழ்ச்சிகளை குறைந்த செலவில் நடத்துவதற்காக, தனியார் திருமண மண்டபங்களுக்கு இணையாக குறைந்த வாடகையில் ஒரு திருமண மண்டபம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 21 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் இந்த திருமண மண்டபம் கட்டப்பட்டு வருகிறது. இந்த மண்டபத்தில் ஒரே நேரத்தில் 600 பேர் அமர்ந்து திருமண நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கான வசதி, முழுவதும் குளிரூட்டப்பட்ட அரங்கம், ஒரே நேரத்தில் 175 பேர் அமர்ந்து உணவு அருந்தக்கூடிய உணவுக்கூடம், மின்தூக்கி வசதி, ஒரே நேரத்தில் 60 முதல் 70 கார்கள் மற்றும் 200 முதல் 300 இருசக்கர வாகனங்கள் நிறுத்தக்கூடிய வாகன நிறுத்துமிடம் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த திருமண மண்டபத்திற்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருப்பெயரை சூட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

வரும் 29ஆம் தேதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது பொற்கரங்களால் "அண்ணல் அம்பேத்கர் திருமண மண்டபத்தை" திறந்து வைக்க உள்ளார். இந்த மண்டபம், இந்தப் பகுதியில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். எல்லோருக்கும் எல்லாம்" என்ற இந்த ஆட்சியின் கனவையும், சமூகநீதி கொள்கைகளையும் வாழ்ந்து காட்டிய அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவுகளைப் போற்றும் வகையில், அவருடைய பெயரில் இவ்வாறு திருமண மண்டபங்கள் அமைக்கப்படுவது இந்த ஆட்சியில்தான் சாத்தியமானது என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

இந்த திருமண மண்டபம் வெறும் விளம்பர ஸ்டிக்கர் அல்ல; முழுக்க முழுக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திட்டமிடப்பட்டு, அவருடைய காலத்திலேயே ஒப்புதல் வழங்கப்பட்டு, அவரே வடிவமைப்பை கவனித்து, பெயர் சூட்டி, வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் ஒரு அடையாளமாக உருவாக்கப்பட்ட திட்டமாகும் எனத் தெரிவித்தார்.

**கேள்வி - இந்த ஜனவரி மாத இறுதிக்குள் எத்தனை கட்டடங்கள் திறக்கப்படும்?**

திருமண மண்டபங்களைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட நேரத்தை நிர்ணயிப்பது கடினமானது. குளிரூட்டும் வசதி, மேஜை, நாற்காலிகள், சமையலறைகள், கழிப்பறை வசதி, குடிநீர் வசதி, வாகன நிறுத்துமிடம் போன்ற பல பணிகள் இதில் அடங்கியுள்ளன. இருப்பினும், பிப்ரவரி 28க்குள் குறைந்தபட்சம் எட்டு திருமண மண்டபங்கள் மக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மற்றும் அமைச்சரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைமுறைக்கு வரும்.

**கேள்வி - தைப்பூச விழா ஏற்பாடுகள் குறித்து:**

இந்த ஆண்டு தைப்பூசம் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. எங்கு பார்த்தாலும் "முருகன் அரோகரா" என்ற முழக்கம் நாடு முழுவதும் ஒலிக்கிறது. முருகப்பெருமானை தரிசிக்க வரும் அனைத்து பக்தர்களுக்கும் இறைப்பசியோடு சேர்த்து வயிற்றுப் பசியும் தீரும் வகையில், அன்னதானம், குடிநீர், கழிப்பறை வசதி, தங்கும் இடவசதி ஆகிய அனைத்தும் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்றும், துறைச் செயலாளர் மற்றும் துறையின் ஆணையாளர் தலைமையில், பழனி திருக்கோயில் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்று வருகிறது. எப்போதும் போல, நாம் முருகருடன் இருக்கிறோம்; முருகரும் எங்களுடன் இருக்கிறார் எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக் இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன்பாபு, மண்டல அலுவலர் திரு. சொக்கலிங்கம், மாமன்ற உறுப்பினர் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**